**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.22/2013**

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 28 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. தனபால் (அ.சா.2) | தொழில் | : லோடு மேன் |
| த/பெ., க/பெ. | : ஆசீர்வாதம் | வயது | : 43 |
| கிராமம் | : எஸ்.புதுக்குளம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : காளையார்கோவில் | நாள் | : 28.01.2025 |
| மாவட்டம் | : சிவகங்கை | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளார்கள்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் சிவகங்கை மாவட்டம், எஸ்.புதுக்குளத்தில் குடியிருந்து லோடுமேனாக வேலை செய்து கொண்டிருக்கிறேன். அ.சா.1 தர்மராஜை எனக்கு தெரியும். 27.02.2010 அன்று நான் அ.சா.1 தர்மராஜ் ஓட்டிய லாரியில் கிளீனராக இருந்தேன். இளையான்குடியிலிருந்து கேரளாவிற்கு நெல் ஏற்றி சென்றுவிட்டு, அங்கிருந்து பணம் ரூ.4,50,000/– பெற்றுக்கொண்டு காலடியிலிருந்து மரத்தூள் ஏற்றி செம்பட்டிக்கு வந்தோம். 27.02.2010 அன்று அதிகாலை 03.30 மணியளவில் நான் லாரியில் தூங்கிவிட்டேன். மூகாம்பிகை கோவில் எதிரில் வண்டி நின்றது. அதன்பிறகு மூன்று ஆண்கள் வந்தார்கள். என்னை எழுப்பினார்கள். என்னிடம் என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். நான் தெரியவில்லை என்று சொன்னேன். மறுபடியும் பருத்தி தோட்டத்தில் இருந்த ஓட்டுனரிடம் சென்றார்கள். என்னை இறக்கி என்னையும் அங்கு கூட்டிச் சென்றார்கள். தோட்டத்திற்குள் ஒரு வயதானவரும், ஒரு பெண்மணியும் இருந்தார்கள். நான் பெட்டியின் சாவியை கொடுக்காமல் தெரியவில்லை என்று

சொல்லிவிட்டேன். அதன்பிறகு பெட்டியை உடைத்து டியூப்பிற்குள் இருந்த ரூ.4,50,000/– பணத்தை எடுத்துக்கொண்டார்கள். ஒரு பத்து நிமிடத்தில் யாரும் அங்கு இல்லை. என்னால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காட்ட முடியும். எதிரிகளின் பெயர்களும் எனக்கு தெரியும். அடையாள அணிவகுப்பிற்கு நான் சென்றதால் எனக்கு எதிரிகளின் பெயர்கள் தெரியவந்தது. ஆஜர் எதிரிகளில் வலதுபுறம் கடைசியாக நிற்பவர் மாரிமுத்து, அதற்கு அடுத்து நிற்பவர் நடராஜன், இடதுபுறம் கடைசியாக நிற்பவர் சுரேஷ். பருத்திக் காட்டுக்குள் இருந்த பெண்ணையும், ஆணையும் எனக்கு சரியாக அடையாளம் தெரியவில்லை. மேற்படி வண்டியின் ஓட்டுனர் அழுது புலம்பினார். சத்திரப்பட்டி காவல்நிலையத்திற்குப் போனோம். அவர்கள் சம்பவ இடம் தங்கள் இடம் இல்லை என்று சொல்லி ஆயக்குடி காவல் நிலையத்திற்குச் செல்லுமாறு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான் காவல் நிலையத்திற்குள் செல்வதற்குள்ளாக அ.சா.1 தன் மேல் டீசலை ஊற்றி பற்ற வைத்துக்கொண்டார். அவர் தீப்பிடித்தவாறே காவல் நிலையத்தை நோக்கி வந்தார். போலீசார் என்னை அருகே செல்லவேண்டாமென்று தடுத்தார்கள். காவல் நிலையத்தில் அ.சா.1–க்கு மருந்துகள் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். காலையில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கப்பட்டது. அதன்பிறகு காவல்துறை உயர் அதிகாரிகள் வந்து சம்பவ இடத்தை பார்த்துவிட்டு விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகளை செம்பட்டிக்கு அருகில் கைது செய்ததாகச் சொன்னார்கள். என்னிடம் புகைப்படமும் காட்டினார்கள். செம்பட்டிக்கு அருகில் உள்ள மலைப்பகுதிக்கு அழைத்துச் சென்று 1, 2, 6 எதிரிகளை காண்பித்தார்கள். அங்கிருந்து என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். பணத்தை உரிமையாளர் திரும்பப் பெற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**சம்பவம் நடந்து 3, 4 நாட்கள் கழித்து செம்பட்டி அருகில் என்னை அழைத்துச் சென்று எதிரிகளைக் காண்பித்தார்கள். அப்போது 6–ம் எதிரியும் உடனிருந்தாரா என்றால் 1 மற்றும் 2 எதிரிகளை அங்கு பார்த்தவுடனேயே நான் இவர்கள் தான் என்று போலீசாரிடம் சொல்லிவிட்டேன். 1 மற்றும் 2 எதிரிகளுடன் எத்தனை பேர் இருந்தார்கள் என்பதை நான் சரியாக கவனிக்கவில்லை. நான் புகார் கொடுக்கும்போது உரிமையாளர் வந்துவிட்டாரா என்றால் அப்போது அவர் வரவில்லை. அவருக்கு போனில் தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகு உரிமையாளர் வந்தார். எத்தனை நாள் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் ஒரு வாரம் இருந்தேன். நான் ஒரு வாரம் காவல் நிலையத்தில் இருந்தபோது எதிரிகளை காவல் நிலையம் அழைத்து வந்தார்களா என்றால் இல்லை. திண்டுக்கல்லுக்கு அடையாள அணிவகுப்பிற்கு என்னை அழைத்துச் சென்றார்கள். காவல் நிலையத்தில் ஒரு வாரம் இருந்ததற்கு பிறகு எப்போதாவது போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் என்னை அடிக்கவில்லை. பணம் வண்டியில் இருந்த விபரம் எனக்கும் தெரியும். வண்டியில் பணம் இருந்த விபரத்தை நான் தான் எதிரிகளிடம் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தகவல் கொடுத்த காரணத்தால் தான் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வண்டியில் பணமே இல்லை என்றும், என் முதலாளியின் பணப் பிரச்சனை காரணமாக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. எங்கள் வண்டிக்கு முன்பாக மேலும் இரண்டு வண்டிகள் அங்கு இருந்தது. அதன் ஓட்டுனரும் காட்டிற்குள் தான் இருந்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் அந்த வாகனங்களின் ஓட்டுனர்களையும் எதிரிகள் காட்டிற்குள் உட்கார வைத்திருந்தார்கள். அவர்களையும் போலீசார் விசாரித்தார்களா என்றால் அவர்கள் காவல் நிலையத்திற்கு வரவில்லை. மொத்தம் எத்தனை நபர்கள்**

காட்டிற்குள் இருந்தோம் என்றால் மூன்று வண்டிகளிலும் சேர்த்து எத்தனை பேர் இருந்தோம் என்று ஞாபகமில்லை. மொத்தம் நான்கு பேர் இருந்திருப்போம். எங்கள் வண்டியின் ஓட்டுனரை கட்டிப்போட்டிருந்தார்கள், யார் கட்டிப்போட்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதை யார் அவிழ்த்துவிட்டது என்றால் நான் தான் அவிழ்த்துவிட்டேன். ஓட்டுனர் அவராக கட்டை அவிழ்க்கவில்லை என்றால் சரிதான். மற்ற வாகனங்களின் ஓட்டுனர்கள் அவர்களாக சென்றுவிட்டார்கள். நான் கூறும் சம்பவம் உண்மை என்றால் மற்ற பாதிக்கப்பட்ட ஓட்டுனர்களும் புகார் கொடுத்திருப்பார்கள் என்றும், அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னாலும் சரியல்ல, மற்ற ஓட்டுனர்களிடம் 1000, 2000 என குறைவான தொகை பறிபோனதால் அவர்கள் புகார் கொடுக்கவில்லை. போலீசார் விசாரிக்கும்போது மேற்படி விபரங்களை நான் தெரிவித்திருக்கிறேன். மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றும், குறுக்கு விசாரணையிலும் சொல்லவில்லை என்றும், நான் கேட்டுக்கொண்டதற்காக மாற்றி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4 மற்றும் 5–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.28 19:07:33 +0530